Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 26 2024

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 26, 2024 | ஒளி: 09 கதிர் 239 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## கர்தினாலின் குற்றச்சாட்டுகளை மறுத்தார் கோட்டா



உயிர்த்த ஞாயிறு தொடர்பான கர்தினால் மல்கம் ரஞ்சித் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்ட இரு தரப்புகள் குறித்த உண்மைகளை கர்தினால் மறைக்கின்றார் அல்லது வெளிப்படையாகத் தவிர்க்கின்றார் என குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு என்னிடம் கையளிக்கப்பட்ட மறுநாள் நான் கர்தினால்மல்கம் ரஞ்சித்தை தொடர்புகொண்டேன் என கர்தினால் தெரிவித்துள்ளார். ஆனால், நான் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கர்தினாலை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவேயில்லை என கோட்டாபய தெரிவித்துள்ளார். முஸ்லீம் சமூகத்தினர் எனக்கு வாக்களிக்கவில்லை என்னை ஆதரிக்கவில்லை என்பது நன்கு தெரிந்த விடயம் இதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தடைசெய்யப்படவேண்டிய எந்த அமைப்பிலும் நான் ஏன் ஆதரவாளர்களை

தொடர்ச்சி P2



## "துப்பாக்கிச் சூடு நடத்தி விளையாடும் திடல் இல்லை"

### வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் சாட்சி

எம்.றொசாந்த்

நல்லூர் ஆலய சூழல், துப்பாக்கி சூடு நடாத்தி விளையாடும் திடல் இல்லை என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது சாட்சியில் தெரிவித்தார்.

நீதிபதி இளஞ்செழியன் மீது கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி ஆலய தெற்கு வாசல் கோபுரத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

தொடர்ச்சி P2





## தமிழர்கள் இந்த நாட்டில்

# வாழக்கூடாதா?

### ஸ்ரீதரன் கேள்வி; அடிக்கடி 4ஆம் மாடிக்கு அழைப்பதாக குற்றச்சாட்டு

**போராளிகளினதும் சமூக செயற்பாட்டாளர்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்**

**அரவிந்தனை உடனடியாக விடுதலை செய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்**

இந்த நாட்டில் தமிழர்கள் இருக்கக்கூடாது அல்லது வாழக்கூடாது என அரசு நினைக்கின்றதா? என கேள்வியெழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான எஸ்.ஸ்ரீதரன் யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் நிறைவுறுவதாக சொல்லப்படுகின்ற நிலையில் கூட தமிழர்கள் சுதந்திரமாக வாழ முடியாதுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

செயற்பாட்டாளர்கள் செயற்பட முடியாதுள்ளது. தடுக்கப்படுகின்றார்கள். விசாரிக்கப்படுகின்றனர். அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) இடம்பெற்ற 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை 2ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

வவுனியா - தோணிக்கல்லை சேர்ந்த முன்னாள் போராளியும் சமூக செயற்பாட்டாளருமான செல்வநாயகம் ஆனந்தவர்மன் என்கின்ற அரவிந்தன் கடந்த 2024 -03-26ஆம் திகதியன்று பயங்கரவாத குற்றத்தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினரால் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டு தற்போது வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## தடுமாறுகிறது இ.தொ.கா.

### மனோ குற்றச்சாட்டு; காடைத்தனம் என்கிறது



"இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க போராட்டம் நடத்துவதாகச் சொல்லி ரவுடித்தனம், காடைத்தனம் செய்கின்றதா? என கேட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரான மனோ கணேசன் எம்.பி. அறிவுரை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கேட்டக்கொண்டார். கண்டி புஸ்ஸலாவையில் வேலுகுமார் எம்.

தொடர்ச்சி P2

## கருத்தரங்கு தடை

கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்காக நடத்தப்படும் மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் அனைத்தும் இம்மாதம் 30ஆம் திகதி நள்ளிரவு முதல் இடைநிறுத்தப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் மே மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகி மே 15ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

தடை செய்யப்பட்ட காலப்பகுதியில் பயிற்சி வகுப்புகளை நடத்தினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.




## ITC Ratnadipa...

கொழும்பு–01 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள ITC Ratnadipa பிரமாண்டமான ஹோட்டல், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் வியாழக்கிழமை (25) திறந்துவைக்கப்பட்டது. இதில், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சன்தோஷ் ஜா ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (படம்: பிரதீப் தில்ருக்ஷன)

## பால் தேநீர் விலை குறைப்பு



இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை குறைப்பு சலுகையை நுகர்வோருக்கு வழங்கும் வகையில் ஒரு கோப்பை பால் தேநீரை 80 ரூபாய்க்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை, சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடம் தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "வட்டியை கூட்டினால் செலவும் கூடும்"

சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டியை 15 வீதமாக வழங்க வேண்டுமானால் அரசாங்கம் மேலும், 40 பில்லியன் ரூபாவை அதற்காக செலுத்த நேரிடும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமது கேள்வியின் போது, வங்கி வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான

தொடர்ச்சி P2



## ஐயாவுக்கு விடுமுறை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா, பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்காமல் இருக்க மேலும் 3 மாத கால விடுமுறை வழங்க பாராளுமன்றம் அனுமதியளித்துள்ளது.

பாராளுமன்றம் வியாழக்கிழமை (25) எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி., த.தே.கூவின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்காமல் இருக்க மேலும் 3 மாத கால விடுமுறை வழங்கும் முன்மொழிந்தார். அதற்குப் பாராளுமன்றம் அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## "அரிசியை அரிசியுடன் இணைக்க வேண்டாம்"

பாவனைக்கு உதவாத அரிசி பாடசாலை மாணவர்களுக்கான கல்வி அமைச்சின் உணவு வேலைத் திட்டத்துடன் தொடர்புடையது அல்ல என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாவனைக்கு உதவாத அரிசியை, கல்வியமைச்சி னால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் உணவு வேலைத் திட்டத்துடன் இணைத்து குழப்பிக் கொள்ள வேண்டாம் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## "இந்தியாவால் தகவல் வழங்கப்பட்டுள்ளது"

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னால் சர்வதேச சூழ்ச்சி இருந்ததாகத் தெரியவில்லை என்று எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்‌ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

**" விடுதைலைப் புலிகள் காலத்தில் இந்திய இராணுவத்தினர் இலங்கையின் பாதுகாப்புக்காக அவர்களின் உயிரையும் கொடுத்துள்ளனர். மோடி அரசாங்கம் முழுக் காலத்தையும் பொருளாதார அபிவிருத்திக்காகவே செயற்படுகின்றது**



PAGE 1 தொடர்ச்சிகள்

# கர்தினாலின் குற்றச்சாட்டுகளை மறுத்தார் கோட்டா

வைத்திருக்கவேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை என்னிடம் கையளிக்கப்பட்டது. நான் அதனை ஆராய்ந்த பின்னர் சட்ட மா அதிபரிடம் பாரப்படுத்தினேன் 2021 பெப்ரவரி 23ஆம் திகதி அது சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது மார்ச் முதலாம் திகதி அதன் பிரதிகள் பௌத்த கர்தினால் மற்றும் கத்தோலிக்க ஆயர்களிற்குக் கையளிக்கப்பட்டது எனவும் கோட்டாபய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையைச் சமர்ப்பித்ததும் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நான் ஆறுபேர் கொண்ட அமைச்சரவை உப குழுவை நியமித்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வாழக்கூடாதா?

இவர் 2009ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையான எட்டரை ஆண்டுகள் தமிழ் அரசியல் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னர் முன்னாள் போராளிகளினதும் அவர்களின் குடும்பங்களினதும் கல்வி , பொருளாதார நெருக்கீடுகளை தீர்க்கும் மனிதாபிமான செயற்பாடுகளைப் புலம்பெயர் நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்போடு முன்னெடுத்தும் போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவராக இருந்து பலதரப்பட்ட சமூகப்பணிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

ஆனால், இவர் மீது சி.ஐ.டியினர் சுமத்தியுள்ள பொய்க் குற்றச்சாட்டுக்களான பயங்கரவாதத்திற்கு உதவியளித்தல், விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்தல் போன்ற எந்த செயற்பாடுகளிலும் இவர் ஈடுபட்டிருக்கவில்லை. மனிதாபிமான பணிகளில் ஈடுபட்ட ஒருவரை வாக்குமூலம் பெறுவதென்ற போர்வையில் கொழும்பிலுள்ள சி.ஐ.டி. அலுவலகத்திற்கு அழைத்து அங்கு வைத்து கைது செய்து சிறையில் அடைப்பதென்பது இந்த நாட்டின் அதி உச்ச எதேச்சாதிகாரத்தையே மீண்டும் காட்டியுள்ளது.

சமூக நலப்பணிகளில் ஈடுபட்டு வரும் முன்னாள் போராளிகளை அச்சுறுத்தும் வகையிலும் அவர்களது இயங்கு நிலையை முடக்கும் வகையிலும் திட்டமிட்ட வகையில் கைது செய்யப்பட்டுள்ள அரவிந்தனை உடனடியாக விடுதலை செய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நாட்டில் முன்னாள் போராளிகளினதும் சமூக செயற்பாட்டாளர்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

முன்னாள் போராளிகள், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் இவ்வாறு அடிக்கடி 4ஆம் மாடிக்கு அழைத்து விசாரிக்கப்படுவதும் நாட்டில் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றார்.

# “துப்பாக்கிச் சூடு நடத்தி விளையாடும் திடல் இல்லை”

நீதிபதி இளஞ்செழியன் புதன்கிழமை (24) நீதிமன்றில் தோன்றி, தனது சாட்சியங்களைப் பதிவு செய்தார்.

சம்பவ தினத்தன்று மேல் நீதிமன்றிலிருந்து எனது காரில் யாழ். - கண்டி வீதி வழியாகச் சென்று, கோவில் வீதி வழியாக எனது உத்தியோகபூர்வ இல்லத்தை நோக்கிப் பயணித்தேன்.

காரினை எனது சாரதி ஓட்டினார். அவருக்கு அருகில் எனது ஒரு மெய்ப்பாதுகாவலர் அமர்ந்திருந்தார். நான் காரின் பின் இருக்கையில் அமர்ந்து இருந்தேன்.

எனது கார் சாரதியின் மோட்டார் சைக்கிளை எனது மற்றுமொரு மெய்ப்பாதுகாவலர் செலுத்தி வந்தார்.

நல்லூர் ஆலய பின் வீதியில் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டமையால், மோட்டார் சைக்கிளில் முன்னே சென்ற எனது மெய்ப்பாதுகாவலர் வீதியின் போக்குவரத்தினை சீர் செய்து எனது காரினை சந்தியால் பருத்தித்துறை வீதி பக்கம் அனுப்பினார்.

அவ்வேளை, காரின் பின் புறமாக இருந்த நான் காரின் கண்ணாடி வழியாக பின் புறம் அவதானித்த போது, சிவில் உடை தரித்த நபர் ஒருவர் வீதியில் போக்குவரத்தினை சீர் செய்து கொண்டிருந்த எனது மெய்ப்பாதுகாவலரின் இடுப்பு பட்டியிலிருந்த துப்பாக்கியைப் பறிக்க முற்பட்டார்.

அதனை அவதானித்து காரினை நிறுத்துமாறு சத்தமிட்டேன். மெய்ப்பாதுகாவலர் சிவில் உடை தரித்தவரிடம் இருந்து தனது துப்பாக்கியைப் பறிக்க மல்லுக்கட்டினார்.,

நான் காரினை விட்டு இறங்கி துப்பாக்கியைக் கீழே போடுமாறு கத்தினேன். எனக்கும் அவர்களுக்கும் இடையில் 12 - 15 அடி இடைவெளி இருந்தது. துப்பாக்கியை பறித்தவர் துப்பாக்கியை லோர்ட் செய்தார். சிறிது நேரத்தில் “மகே அம்மே” என கத்தியவாறு எனது மெய்ப்பாதுகாவலர் வயிற்றைப் பிடித்தவாறு சரிந்து விழுந்தார்.

அடுத்து துப்பாக்கியுடன் நின்றவர், என்னை நோக்கிச் சுட்டார் உடனே என்னுடன் காரில் பயணித்த மற்றைய மெய்ப்பாதுகாவலர், என்னை காரின் இடது புறம் தள்ளி விட்டு கீழே படுத்துக்கொண்டார். அவ்வேளை, அவரது இடது தோள் புறத்தில் துப்பாக்கிச் சூடுபட்டது. பதிலுக்கு எனது மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இருவரது துப்பாக்கி ரவைகளைத் தீர்ந்த நிலையில், சிவில் உடை தரித்தவர் எனது காரின் எதிர்புறமாக பருத்தித்துறை வீதி வழியாக ஓடித் தப்பினார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவரை சுமார் 12 நிமிடங்கள் நேரில் பார்த்தேன் என்பதால், எதிரி கூண்டில் நிற்கும் எதிரி தான் துப்பாக்கிச் சூட்டினை நடத்தினார் என நன்கு தெரியும் என கூறினார்.

குறுக்கு விசாரணையின் போது, எதிரியின் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, “முச்சக்கர வண்டி சாரதிக்கு இடையிலான முரண்பாட்டின் போது, உங்கள் மெய்ப்பாதுகாவலர் தலையீடு செய்தமையால், ஏற்பட்ட முரணாலையே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது, உங்களைக் கொல்லவேண்டும் என்ற நோக்கம் இருக்கவில்லை” என குறிப்பிட்டதை, நீதிபதி மறுதலித்து “நல்லூர் ஆலய சூழல் சுட்டு விளையாடும் திடல் அல்ல என தெரிவித்தார்.

நீதிபதியின் சாட்சியம் நிறைவுற்றதை அடுத்து, நீதிபதி பலத்த பாதுகாப்புடன், நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறினார்.

அதேவேளை, சம்பவ தினத்தன்று, நீதிபதியின் மற்றுமொரு மெய்ப்பாதுகாவலராக கடமைக்குச் சென்று, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பொலிஸ் உத்தியோகஸ்தர் தனது சாட்சியத்தின் போது, துப்பாக்கிச் சூட்டில்

எனது நண்பர் படுகாயமடைந்த நிலையில், நான் எனது நண்பரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே எனக்கு இருந்தது. அதனால் சூழலை என்னால் முழுமையாக அவதானிக்க முடியவில்லை என கண்ணீருடன் தனது சாட்சியத்தைப் பதிவு செய்தார்.

குறித்த வழக்கு விசாரணைகள் வெள்ளிக்கிழமை(26) வரை தொடர்ச்சியாக மூன்று தினங்கள் யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

# பால் தேநீர் விலை குறைப்பு

அத்துடன், டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வியாழக்கிழமை (25) முதல் அமுலுக்கு வரும் வகையில் பால்மா இறக்குமதியாளர்கள் பால் மாவின் சில்லறை விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிதுள்ளார்.

அண்மைகாலமாக பால்மாவின் விலை உயர்வு காரணமாக, பால் தேநீர் அருந்துவதற்கு ஹோட்டல்களுக்கு வருவதை மக்கள் தவிர்த்து வந்தனர்.

தற்போது அந்த நிலை மாறி, மீண்டும் 80 ரூபாய்க்கு ஒரு கோப்பை பால் தேநீர் குடிக்கும் வாய்ப்பு மக்களுக்கு கிடைத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# “வட்டியை கூட்டினால் செலவும் கூடும்”

வங்கி வைப்புக்கான வட்டி வீதமும் குறைக்கப்பட்டுள்ளது. அதனை நம்பி வாழும் அவர்களின் வட்டி வீதத்தை அதிகரித்து வழங்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு நிதி இராஜாங்க அமைச்சர் பதிலளித்த போதே, இக் காலங்களில் வங்கி வட்டி வீதம் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. கடனுக்கான வட்டி அதிகரிக்கப்பட்டு வங்கி வைப்புக்கான வட்டியை 16 வீதத்திலிருந்து தற்போது தனி இலக்கத்திற்கு கொண்டு வந்துள்ளோம். வைப்புக்களுக்கான வட்டியை குறைப்பது இயல்பாக இடம்பெறுகின்ற ஒன்று. அது தொடர்பில் சிரேஷ்ட பிரஜைகளும் சில பாதிப்புகளை எதிர் கொள்ள நேர்ந்துள்ளது என்றார்.

# தடுமாறுகிறது இ.தொ.கா.

பி மீது, இ.தொ.கா அங்கத்தவர்கள் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி தொடர்பில், வியாழக்கிழமை (25) நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின் போதே மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பில், முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளேன். ஒரு மக்கள் பிரதிநிதி என்ற முறையில் அவரை தனது கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்த நபர்களின் அடையாளங்கள் காணொளியில் உள்ளன. அதன்படி அவர்களை உடன் கைது சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் கூறியுள்ளேன்

**இன்று சொன்னபடி எதையும் நிறைவேற்ற முடியவில்லை என்பதால், இயலாமை என்ற விரக்தி உணர்வால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தடுமாறுகிறது**

1,700 ரூபாய் நாட் சம்பளம், பத்து பேர்ச் காணி, தனி வீடு, பல்கலைக்கழகம் என்று வரிசையாக மக்களுக்கு வாக்குறுதிகள் அளித்து விட்டு, அவற்றை இந்த திகதிக்குள் பெற்றுத் தருவோம் என்று காலக்கெடுவையும் அறிவித்து விட்டு, இன்று சொன்னபடி எதையும் நிறைவேற்ற முடியவில்லை என்பதால், இயலாமை என்ற விரக்தி உணர்வால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தடுமாறுகிறது என்றார்.

# “அரிசியை அரிசியுடன் இணைக்க வேண்டாம்”

கல்வியமைச்சின் நிதியைச் செலவிட்டு பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமற்ற ஒவ்வாத உணவு ஒருபோதும் வழங்கப்பட மாட்டாது என தெரிவித்த அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் உணவு அந்தந்த மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்புக்கு அடிக்கடி உட்படுத்தப்படுகின்றது.

இந்த முறைமையின் கீழே பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்த வகையில், 110 ரூபாய் பெறுமதியான ஒரு வேளை உணவு பாடசாலை மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# “இந்தியாவால் தகவல் வழங்கப்பட்டுள்ளது”

இந்தியாவில் இருந்து தகவல்கள் வந்துள்ளன. நிலந்த ஜயவர்தனவுக்கு வந்துள்ள போதும், அவரின் தொலைபேசியில் இருந்த தகவல்கள் அழிக்கப்பட்டுள்ளன. தகவல் தெரிந்தும் சம்பவங்கள் நடக்க இடமளிக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற பின்னர் கட்டுவாப்பிட்டிய சென்று தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கோட்டாபய ராஜபக்ஷ கூறினார். அப்படிதான் அவர் வந்தார்.

இந்தியாவைத் தாக்குதலுடன் தொடர்புப்படுத்திக் கூறுகின்றனர். ஆனால், இந்தியாவினாலேயே தாக்குதல் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. 5 தடவைகள் தகவல் வழங்கியுள்ளது. விடுதைலைப் புலிகள் காலத்தில் இந்திய இராணுவத்தினர் இலங்கையின் பாதுகாப்புக்காக அவர்களின் உயிரையும் கொடுத்துள்ளனர்.

மோடி அரசாங்கம் முழுக் காலத்தையும் பொருளாதார அபிவிருத்திக்காகவே செயற்படுகின்றது என்றார்.

# “பிள்ளையானை கைது செய்தால் உண்மைகள் வெளிவரும்”

பிள்ளையான் எம்.பியை கைது செய்து விசாரணை நடத்தினால் 2005 முதல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் வரையிலான அனைத்து உண்மை தகவல்களையும் அறிந்துகொள்ளலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019ஆம் ஆண்டில் நடந்திருந்தாலும் அதனுடன் தொடர்புடைய குழுக்கள் 2005ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டில் செயற்பட்டு வந்துள்ளனர். இது தொடர்பில் அடிக்கடி கூறியிருந்தாலும் இதன் பாரதூர தன்மை தொடர்பில் புரிந்துகொள்ளாது இருக்கின்றனர். எவ்வாறாயினும் தற்போது 2014ஆம் ஆண்டில் நடந்த சம்பவமொன்று தொடர்பில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் புலனாய்வுப் பிரிவினால் மூன்று இனங்களையும் உள்ளடக்கிய புலனாய்வுக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**இந்த சம்பவங்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் இடையே என்ன தொடர்பு என்று நினைக்கலாம். ஆனால், 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டு கிழக்கில் ஸ்திரமற்ற நிலைக்குக் கொண்டு செல்ல பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறாகப் பரிசோதிக்கப்பட்ட விடயங்களே பின்னர் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளது**

2004ஆம் ஆண்டில் சாமானிய நெஞ்சங்கள் என்ற அமைப்பொன்று அமைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பாயிஸ், ஆமி மொஹிதின், கலீல் ஆகிய மூவரையும் உள்ளடக்கியதாக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. கலீல் என்ற நபர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் சிறைக்குச் சென்று விடுதலையானவர்.

2009ஆம் ஆண்டில் திருகோணமலையில் 6 வயது வர்ஷா என்ற சிறுமி பெற்றோரிடம் கப்பம் கோரி கடத்திச் செல்லப்பட்டு கொலை செல்லப்பட்டுள்ளார். இது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலைக்கு பொறுப்பான மேர்வின் என்பவர் கைது செய்யப்படுகின்றார். ஜனார்த்தனர், நிசாந்தன், றெஜினோல்ட் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரின் பொறுப்பில் இருந்த போதே உயிரிழந்துள்ளனர். இதேவேளை, 8 வயது சிறுமி ஒருவரும் கப்பம் கோரி 2009இல் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அந்த சம்பவம் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பின்னர் அவர்கள் நால்வரும் அரச படையினரால் கொல்லப்பட்டுள்ளார். புலனாய்வு பிரிவின் குழுவினர் தமது நோக்கத்திற்காகக் கப்பம் பெறும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன், அதன்பின்னர் கைது செய்யப்படுபவர்களைக் கொல்லும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு பலர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.


இந்த சம்பவங்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் இடையே என்ன தொடர்பு என்று நினைக்கலாம். ஆனால், 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டு கிழக்கில் ஸ்திரமற்ற நிலைக்குக் கொண்டு செல்ல பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறாகப் பரிசோதிக்கப்பட்ட விடயங்களே பின்னர் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பல்வேறு தகவல்கள் வெளியாகின்றன. பிள்ளையான் உள்ளே இருந்தால் அவர் பலவற்றைக் கூறலாம் என்பதனால் அவரை விடுதலை செய்ய நடவடிக்கையெடுத்துள்ளனர். ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் பிள்ளையானுடன் கைது செய்யப்பட்ட கஜன் மாமா என்பவர் சில மாதங்களுக்கு முன்னர் திடீரென உயிரிழந்துள்ளார். மரண பரிசோதனைக்கு இடமளிக்காது அவரின் உடலை எரித்துள்ளனர். இதேவேளை, குறித்த எம்.பியை காப்பாற்ற நினைக்காது, அவரிடம் உள்ள 50 ஆயிரம் வாக்குகளைப் பார்க்காது அவரை கைது செய்யுங்கள். இவர் ஒருவரைக் கைது செய்தால் 2005ஆம் ஆண்டில் இருந்து உண்மைகளை அறியலாம் என்றார்.

## கொக்குவில் புகையிரத நிலையத்துக்கு

# சீல்



எம்.றொசாந்த், நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - கொக்குவில் புகையிரத நிலையத்தில் கடமையாற்றிய நிலைய பொறுப்பதிகாரி 20 இலட்சம் ரூபாய் மோசடி செய்துள்ளதாகத் தெரிவித்து கேப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உடனடி நடவடிக்கையாகப் புகையிரத நிலையம் சீல் வைக்கப்பட்டு, மூடப்பட்டுள்ளதுடன், நிலைய பொறுப்பதிகாரி தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த புகையிரத நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால் பிரயாணப் பயணச் சீட்டுக்களை பெற யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு செல்லவும் என்று அறிவிப்பு ஒன்றும் கொக்குவில் புகையிரத நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## மஹிந்தானந்தவுக்கு எதிரான வழக்கு

# 30ஆம் திகதி தீர்ப்பு



பண மோசடி தடுப்பு சட்டத்தின் கீழ், குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 30ஆம் திகதி வழங்கப்படுமென கொழும்பு மேல் நீதிமன்றம் வியாழக்கிழமை (25) உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதமாக சம்பாதித்தாக கூறப்படும் சுமார் 27 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான செலவில் கொழும்பு - கின்சி வீதியில் சொகுசு வீடு ஒன்றைக் கொள்வனவு செய்தார் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பே வழங்கப்படவுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடிக்கல் நாட்டும் நிகழ்வு

எஸ்.தில்லைநாதன்

பருத்தித்துறை நகர சபையினரால் பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் மீன் சந்தைக்கு அருகில் புதிய மரக்கறி சந்தைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு புதன்கிழமை (24) காலை 9:22 மணியளவில் சுப வேளையில் இடம் பெற்றுள்ளது.

சமய கிரியைகளை தொடர்ந்து பருத்தித்துறை நகர சபை வருமான வரி பிரிவு கிளைத் தலைவர் தி.சிவநேசன் மரக்கறி சந்தைக்கான அடிக்கல்லினை நாட்டிவைத்துள்ளார்.

51 மில்லியன் ரூபாய் பெறுமதியான குறித்த மரக்கறி சந்தை கட்டிடம் பருத்தித்துறை நகர சபையின் சொந்த நிதியில் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை நகர சபையின் நிர்வாக பொறுப்பு அதிகாரி, நிரஞ்சனி உமாகாந்தன் பிரதம பொது முகாமைத்துவ அதிகாரி கமலினி உதய சேகரன் உள்ளூராட்சி உதவியாளர் தாரணி மதியழகன் கணக்கு பதிவு அதிகாரி செபஸ்தியாம்பிள்ளை ராஜ்குமார் உட்பட பருத்தித்துறை நகரசபை அதிகாரிகள் நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்துள்ளனர்.





# புதிய தளபதி நியமனம்

பாறுக் ஷிஹான்

இலங்கை இராணுவத்தின் அம்பாறை 24ஆவது பிரிவின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் அனில் பெரேரா வியாழக்கிழமை (25 ) பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

24ஆவது டிவிசனுக்கு வந்தடைந்த புதிய பிரிவு தளபதிக்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மகா சங்கத்தின் பிரித் சத்காயனா பின்னர், தனது புதிய பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார்.

அம்பாறை புத்தங்கல ராஜகிய பண்டித திகவாபி சுசீம தேரர் இங்கு மூன்று இனங்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் பணிபுரியும் பலமும் துணிவும் புதிய பிரிவு தளபதிக்கு கிடைக்குமென ஆசிர்வதித்துள்ளார்.

அதன் பின் 24ஆவது பிரிவு வளாகத்தில் மரம் இராணுவ தளபதியினால் நடப்பட்டுள்ளது .

இந் நிகழ்வில் 24ஆவது படைப் பிரிவின் கீழ் உள்ள படையணிகளின் பிரிவுத் தளபதிகளும் கலந்து கொண்டு புதிய பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் அனில் பெரேராவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.



# 80 ஆண்டுகள் நிறைவு விழா



செ.தி.பெருமாள்

தலவாக்கலை-சென் கிளேயர் தமிழ்க் கல்லூரி நிறுவப்பட்டு 80 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்தகுமார் தலைமையில் கொட்டகலையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது கல்லூரியின் விளையாட்டு, இசை மற்றும் பல்வேறு பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், சென் கிளையர் வித்தியாலய அதிபர் வேலாயுதம் தினகரன் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெருந்திரளான அதிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

## சிவனொளிபாத மலையிலிருந்து

# குதித்த இளைஞன் மீட்பு



சிவனொளிபாதமலை உச்சியின் முற்றத்தில் இருந்து கீழே குதித்து காணாமல் போன இளைஞன் புதன்கிழமை (24) மதியம் மீட்கப்பட்டுள்ளதாக நல்லத்தண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை, சூரியவெவ பிரதேசத்தில் இருந்து இரண்டு பெண்களுடன் சிவனொளிபாதமலை சென்ற தினேஷ ஹேமந்த (33) என்ற இளைஞன் ஸ்ரீ பாத உட மலுவ பாதுகாப்பு வேலியில் இருந்து கீழே குதித்துள்ளார். அந்த காணொளி பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மரே தோட்டத்தை சேர்ந்த இளைஞர் சிலர் விறகு வெட்டுவதற்காக சென்றுள்ள போது, காணாமல்போன இளைஞன் சுயநினைவின்றி கிடப்பதை கண்டு இது தொடர்பில் நல்லத்தண்ணி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதற்கமைய உடனடியாக குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸார், இளைஞனை மீட்டு மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன், பின்னர் இளைஞன் டிக்கோயா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் மஸ்கெலியா வைத்தியசாலையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது, " ஸ்ரீ பாத உடமலுவ வீதியில் வைத்து எனக்கு என்ன நடந்தது என ஞாபகம் இல்லை, சுயநினைவுக்கு திரும்பியபோது, ஒரு கால்வாய் அருகே இருந்தேன், பின்னர் மெதுவாக ஐந்து நாட்களாக கால்வாயில் கீழே இறங்கினேன், சிவனொளிபாதமலை காப்புக்காட்டில் உள்ள பாறைக் குகைகளில் இரவைக் கழித்தேன் அந்த நாட்களில் தண்ணீர் மட்டும் குடித்து பசியைத் தீர்த்துக்கொண்டேன்" என தெரிவித்துள்ளார்.

மேலும் , குறித்த இளைஞனின் காலில் சில சிறிய காயங்கள் இருப்பதாகவும், அவரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பெண்களை முற்றுமாய் வலுவூட்டல் ஒரு மாத வலுவூட்டல்

# பிரசாரத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ள SDB வங்கி

பெண்களை வலுவூட்டலானது SDB வங்கியின் அதன் துவக்கம் முதலான வியாபாரத்திற்கான அணுகுமுறையின் மையமாக விளங்குவதுடன் அதனது நிறுவன சிந்தனாதளத்திலும் ஆழமாக வேரூன்றிய அம்சமாகவும் காணப்படுகின்றது. வங்கியின் வெற்றிகரமான இருமுக அணுகுமுறையானது நிறுவனத்திற்குள்ளிருந்து பெண்களை வலுப்படுத்தல் மற்றும் வெளியிலிருந்து பெண்களிற்கு ஆதரவளித்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இவ்வர்ப்பணிப்பானது சமத்துவம், பன்மைத்துவம் மற்றும் உள்ளடக்கல் என்பவற்றிலான வங்கியின் விளம்பரப்படுத்தல்களில் சான்றாவதுடன் உயர் தலைமைத்துவ பதவிகளிலான குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத்தினையும் உள்ளடக்கியதான 48% பெண்களாகக் காணப்படும் அதனது ஊழியப்படையின் உள்ளடக்கத்திலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

தேசம் முழுவதிலுமான பெண்களை வலுவூட்டுவதற்கு அதனது பரந்த பயணத்துடனாக நிறுவனத்திற்குள்ளான பெண்களை அங்கீகரிப்பதற்கும் அஞ்சலி செலுத்துவதற்குமான அதனது முயற்சிகளை பிணைப்பதான, ஒரு தனித்துவமான இலத்திரனியல் ஊடக பிரசாரத்தினை மாதம் முழுவதிலுமாக செயற்படுத்தியுள்ள மையினால் மார்ச் மாதமானது SDB வங்கிக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமிக்கதாக விளங்கியது.

இப்பிரச்சாரத்தின் ஊடாக, வீரமும் அர்ப்பணிப்பும் மிக்க கதைகளை பகிர்ந்தும், எதிர்ப்பின் பலமிக்க செய்தியை வழங்கியும் SDB வங்கியானது தங்களது நிலைகளிலான பெண்களது அளப்பரிய பங்களிப்புக்களை காட்சிப்படுத்தியிருந்தது.

பிரச்சாரத்தின் ஊடாக வலுவினதும் எதிர்ப்பினதும் செய்திகளை வெளிப்படுத்தியதன் நோக்கமானது அக்கருத்தானது அமோக வரவேற்பினைப் பெற்றும் சமூக ஊடகங்களில் நாடளாவிய ரீதியில் உயர் ஆரோக்கிய அடைவுகளைப் பெற்றுக்கொண்டமையினா லும் அமோக வெற்றியினை அடைந்திருந்தது. பரந்தவொரு பெறுநர்களுடன் பொருளார்ந்த தொடர்புகளை ஏற்படுத்திய இக்கதைகளானவை பல பெண்களில் ஒத்த அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

கடந்த பலவருடங்களாக பெண்களை வலுவூட்டுவதனை, குறிப்பாக இலங்கை முழுவதிலுமான பெண் சுயதொழில்வாண்மையாளர்களிற்கான அதன் ஆதரவினை மீள்வரையறுப்பதிலான வங்கியினது தற்போதைய முயற்சிகளிற்கான ஒரு ஊக்கமாக இவ்வெற்றியானது எதிர்பார்க்கப்பட்டது.

கிராமப் புறங்களில் சிறிய மற்றும் நடுத்தர சுயதொழில்வாண்மையாளர்களை முடுக்கிச்செல்லும் ஒரு முக்கிய சக்தியாக, SDB வங்கியானது ஆயிரக்கணக்கான சுயதொழில்வாண்மையாளர்களை அடையாளப்படுத்தல், கல்வியளித்தல், வழிகாட்டுதல் மற்றும் அவர்களது வெற்றிக்குத் தேவைப்படும் நிதியுதவிகளை வழங்குதல் என்பவற்றினால் இலங்கைப் பெண்கள் மத்தியில் சுயதொழில்வான்மையை வினையூக்கப்படுத்தியுள்ளது.

இம்முயற்சிகள் சர்வதேச அங்கீகாரங்களை தேடித்தந்துள்ளதுடன், பெண்களது வலுவூட்டல் துவக்கங்களிற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட யுஎஸ் இன்டர்நேஷனல்டிவலெப்மென்ட் பினான்ஸ் கோர்ப்பரேஷனிடமிருந்து (ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்) 40 மில்லியன் அ.டொலர் மானியத்தினை சமீபத்தில் பெற்றுக்கொண்டமை போன்ற கணிசமான பால்நிலை நிதியிடல்களில் விளைவினை ஏற்படுத்தியுள்ளது.

பெண்களது வலுவூட்டலிற்கான வலுவான அர்ப்பணிப்புடன், SDB வங்கியானது பெண்கள் வெற்றிகொள்வதற்காக வலுவூட்டப்படும் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு அர்த்தமிகு பங்களிப்புக்களை வழங்கும் மிகவும் உள்ளீர்ப்பும் சமத்துவமும் நிலவும் சமூகமொன்றினை வளர்த்தெடுப்பதினை நோக்கிய முக்கிய நகர்வுகளை மேற்கொள்வதனைத் தொடர்கின்றது.




## சீன உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவுடன்

# ஐ.ம.சவின் கூட்டணி சந்திப்பு

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவினர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகளை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து புதன்கிழமை (24) பிற்கபல் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த விசேட சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றுள்ளது.

அதனை தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான துணை அமைச்சர் சன் ஹையன் இடையில் 45 நிமிட நேருக்கு நேர் பிரத்தியக சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

பொருளாதாரம், வர்த்தக, அரசியல் உறவுகள் என பல துறைகள் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் வர்த்தக உறவுகளை ஏற்படுத்துவது தொடர்பில் இரு தரப்புக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளது.

இங்கு, சீனாவின் பொருளாதார அபிவிருத்தி மாதிரியை கருத்திற் கொண்டு, எமது நாட்டிற்கு தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீண்டு வரக்கூடிய முறை குறித்தும் இரு தரப்பினரும் கருத்துகளை பரிமாறிக் கொண்டுள்ளனர்.

இதன்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத் தலைவர்கள், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதிநிதிகள் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருப்பதால், அதன் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் குழுவினரிடம் தெரிவித்ததுடன், மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியைக் கட்டியெழுப்ப தானும், ஐக்கிய மக்கள் சக்தியும் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சந்திப்பில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச திணைக்களத்தின் மத்தியக் குழுவின் துணை அமைச்சர் சன் ஹையன்(Sun Haiyan), சீனத் தூதுவர் Qi Zhenhong, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் Li Jinyan, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் Lin Tao, அதன் பிரதிப் பணிப்பாளர்களில் ஒருவரான வென் ஜுன், இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் ஆலோசகர் சென் சியாங்யுவான், துணை அமைச்சரின் செயலாளர் ஜின் யான், தூதரகத்தின் மூன்றாவது செயலாளராகப் பணிபுரியும் ஜின் என்சே மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஜாங் ஹுயு ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.



அவ்வாறே, ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐக்கிய மக்கள் கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஹர்ஷன ராஜகருணா மற்றும் நளின் பண்டார ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

# மானிய அரிசி விநியோகத்தில் பொறிமுறை அவசியம்

குறைகளையே எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. நிறைகள் அவர்களின் கண்களுக்குத் தெரிவதில்லையென அரசாங்க தரப்பில் அவ்வப்போது தெரிவிக்கப்படுகின்றன. எனினும், செய்வதைத் திருந்தச் செய்தால், எவருமே குறைகளைக் கூறமாட்டார்கள். குறைகள் கண்டறியப்படுகின்றன என்றால், தங்களால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் எங்கோ ஓர் இடத்தில் குளறுபடிகள் உள்ளன என்பதை யூகித்துக்கொள்ள வேண்டும்.

சில திட்டங்கள் திட்டத்தின் உண்மையான நோக்கம் மற்றும் முக்கிய நோக்கத்தைத் தெளிவாகக் கண்டறியாமல் செயல்படுத்தப்படுகின்றன. தேசிய அரிசி விநியோக வேலைத்திட்டம், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கே மானிய அரிசி வழங்கப்படுகின்றன.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் முக்கிய நோக்கம் அக் குடும்பங்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதாகும். அந்த குடும்பங்கள் சில நிபந்தனைகளின் கீழ் அரசு அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. மேலும் அத்தகைய மானியத்துக்குத் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இந்நிலையில், பாவனைக்கு உதவாத அரிசி கலப்படம் செய்யப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அக்குற்றச்சாட்டுகளை கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாராளுமன்றத்தில் வைத்தே மறுத்துள்ளார்.

பாவனைக்கு உதவாத அரிசி பாடசாலை மாணவர்களுக்கான கல்வி அமைச்சின் உணவு வேலைத் திட்டத்துடன் தொடர்புடையது அல்ல என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கல்வியமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் உணவு வேலைத் திட்டத்துடன் பாவனைக்கு உதவாத அரிசியை, இணைத்துக் குழப்பிக் கொள்ள வேண்டாம் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

கல்வியமைச்சின் நிதியைச் செலவிட்டு பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமற்ற ஒவ்வாத உணவு ஒருபோதும் வழங்கப்பட மாட்டாது என தெரிவித்த அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் உணவு அந்தந்த மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்புக்கு அடிக்கடி உட்படுத்தப்படுகின்றது என்றார்.

நமது நாட்டை பொறுத்தவரையில், சர்வதேச நிறுவனங்கள் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. உலக உணவுத்திட்டத்தின் கீழ் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கல்வியமைச்சின் கீழ், மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுகின்றது. அரசாங்கத்தால் மானியமாக அரிசி வழங்கப்படுகின்றது.

இந்நிலையில்தான், பாவனைக்கு உதவாத அரசி வழங்கப்படுவதாக எதிர்க்கட்சியினால் குற்றச்சாட்டப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு மானியங்களை வழங்கும்போது அரசாங்கம் விழிப்பாகவே இருக்கவேண்டும். அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை எழவேண்டும் என்பதற்காகச் சிலர் கலப்படம் செய்யவும் கூடும்.

இதேவேளை, பழைய அரிசிகள் அல்லது பதுக்கிவைத்திருக்கும் அரிசிகளை, குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் தரப்பினர், மானிய அரிசிகளுடன் கலப்படம் செய்துவிடலாம். அவை தொடர்பிலும் விழிப்பாகவே இருக்கவேண்டும்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எதுவுமே தெரியாமல் எதனையுமே கண்டு கொள்ளாமல், எதற்குள்ளும் புகுந்து கொள்ளாமல் வாழ்வதே இலகுவான வழியென மக்கள் கருத ஆரம்பித்துவிட்டனர்.

சும்மா இருப்பதே சுதந்திரமானது எனும் எண்ணத்தில் புகுந்து கொள்வதுகூட ஓர் அடிமை நிலைதான்.

ஆயினும் ஜனங்கள் பிரச்சினைகளுக்குள் நுழையத் தயாராக இல்லை. தேடும் பொழுதுதானே தேவையில்லாத விஷயங்கள் புகுவதாக மக்கள் நினைக்கின்றார்கள்.

சுதந்திரம் எதுவெனப் புரியாத நிலை மிகவும் மோசமானது. மௌனம் இனிமையானது. ஆனால், மௌனம் பயத்தினால் உருவாகக்கூடாது.

மக்களில் ஒருவர் கூட மனம் உடையக்கூடாது. பலகோடி மாந்தர்களில் எல்லோருக்கும் வாழும் உரிமையுண்டு. அன்பான, தாராளமான, விரிந்த இதயம், யாவருக்கும் முழுமையாக அமையவேண்டும்.

நசுக்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும் எவரையும் பிடிக்காமல் போவதும் உலக எழுச்சிக்கு விரோதமானது நீதி எப்போது?

– பருத்தியூர் பால வைரவநாதன்

## கடிதங்கள்

### காவு வண்டி பற்றாக்குறை

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டிகளின் பற்றாக்குறையால் நோயாளிகள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிய வருகின்றது.

மேலும், வைத்தியசாலையின் பாவனைக்காக 12 நோயாளர் காவு வாகனங்கள் இருந்தும் தற்போது 3 வாகனங்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

> முறையற்ற நிர்வாகம் மற்றும் பராமரிப்பு காரணமாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன

இதனால் நோயாளிகளை மேலதிக சிகிச்சைகளுக்காக வேறு வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்வதில் தாமதங்கள் ஏற்படுவதுடன், நோயாளிகள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

வைத்தியசாலையின் முறையற்ற நிர்வாகம் மற்றும் பராமரிப்பு காரணமாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும், பல இலட்சம் ரூபா செலவு செய்து திருத்தப்பட்ட வாகனங்கள், சில நாட்களிலேயே மீண்டும் திருத்த நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும், மருந்துகளை ஏற்றி வருகின்ற வாகனம்கூட தற்போது வைத்தியசாலையில் இல்லாத நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள்கவலை வெளியிடுகின்றனர்.

- அப்துல்சலாம் யாசீம்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின்– 49:

# திறந்த பொருளாதாரக் கொள்கையும் சேதாரமும்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இன்று இலங்கை எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடி உடனடி விளைவல்ல. அதற்கொரு நீண்ட வரலாறு இருக்கின்றது. குறிப்பாக 1977இல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரத்தின் பங்கு பெரிது.

அதேவேளை, இலங்கையின் இனமுரண்பாட்டைக் கூர்மையடைய வைத்ததில் இப்பொருளாதார மாதிரியின் பங்கு முதன்மையானது. ஆனால், அவை பேசப்படுவதில்லை. ஏனெனில், இப்பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்டு 35 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் அதே முறையை இன்றும் பின்பற்றுகிறோம். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற சர்வதேச நிதியியல் அமைப்புகள் அனைத்தும் இம்முறையே சிறந்தது என முன்மொழிகின்றன. ஆனால், இப்படிப்பட்ட சிறந்த முறை எவ்வாறு ஒரு பாரிய நெருக்கடிக்கு இட்டுச் சென்றது என்ற வினாவுக்கு யாராலும் இதுவரை பதிலளிக்க இயலவில்லை.

பெரும்பாலான கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை விட இலங்கை வறுமையில் இருந்து மெதுவான வேகத்தில் தன்னை மீட்டெடுத்தது. பின் கொலனித்துவ நாடுகளின் வெற்றிக் கதைகளில் ஒன்றாக இலங்கை இருக்கும் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், இது பெரும் ஏமாற்றமாக மாறியது.

1948இல் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகள் சிறப்பானதாகத் தோன்றின. இரண்டாம் உலகப் போரில் நாடு மிகச் சிறிய சேதத்தையே சந்தித்தது.

பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்காக உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு புதிய தேசத்திற்குக் கிடைத்தது. 1931இலிருந்து மக்கள் கிட்டத்தட்ட சுய ராஜ்ஜியத்தில் இருந்தனர். ஆனால், சுதந்திரத்துக்குப் பின்னரான அரசாங்கங்கள் பல மோசமான பொருளாதார முடிவுகளை எடுத்துள்ளன.

சர்வ வியாபமாகிக் கொண்டிருந்த ஊழலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. 1960களில் சாதகமற்ற வர்த்தக சமநிலை இறக்குமதி மற்றும் அந்நிய செலாவணி மீது கடுமையான கட்டுப்பாடுகளைக் கட்டாயப்படுத்தியது. இது ஒரு இறக்குமதி மாற்று உத்தியாக விவரிக்கப்பட்டுள்ளது.

1960களின் பிற்பகுதியில் தொழில் மயமாக்கல் முயற்சிகள் தோல்வியடைந்தபோது, அரசாங்கம் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிப்பதாகக் கூறியது. ஆனால், விவசாயத்தை வினைத்திறனுள்ளதாக எதையும் செய்யவில்லை. இறக்குமதிக்கு சில கட்டுப்பாடுகள் மட்டும் விதிக்கப்பட்டன. விவசாயத் தொழில்களின் ஏற்றுமதியையே (முக்கியமாகத் தேயிலை, இரப்பர் மற்றும் தேங்காய்) அந்நிய வருவாய் சார்ந்திருந்தது. இவை வெளிநாட்டு முதலீட்டாளர்களால் உருவாக்கப்பட்டு, குடியுரிமை மறுக்கப்பட்ட தொழிலாளர்களால் பெருமளவில் பயிரிடப்பட்டன.

அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்து வருவதையும், வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகை எதிர்காலத்திற்கான பொருளாதாரப் பிரச்சினைகளை உருவாக்குவதையும் தெளிவாகத் தெரிந்த பிறகும், கொலனித்துவப் பொருளாதாரத்தை மறுசீரமைக்க எதுவும் செய்யப்படவில்லை.

ஜே.ஆர். ஜெயவர்தன ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, அவர் திறந்த பொருளாதாரம், என்று சுருக்கமாகக் கூறப்பட்ட தொடர்ச்சியான பொருளாதார சீர்திருத்தங்களை விரைவாக அறிமுகப்படுத்தினார். இச்சீர்திருத்தங்கள் அபிவிருத்தி உத்திகள் மற்றும் அரசியல் தேவைகளின் கலவையாகும். மேலும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பொருளாதார செயல்முறைகளுக்கும் இன மோதல்களுக்கும் இடையிலான உறவைப் புரிந்து கொண்டதாக நினைத்தார். இனப் பதட்டங்களை முடக்குவதற்குப் பொருளாதார அபிவிருத்தி ஒரு முன் நிபந்தனை என்று அவர் நம்பினார். அதேவேளை, இலங்கை முதலாளித்துவத்தைப் பௌத்த முகத்துடன் உறுதியளித்தார்.

அரசாங்கத்தின் முதல் வரவு-செலவுத் திட்டச் செய்தியின் மையக் கருப்பொருள் தனித்துவம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை வலியுறுத்தும் சீர்திருத்தங்களைக் கொண்டிருந்தன. அதாவது ஒரு நியாயமான மற்றும் சுதந்திரமான சமூகத்திற்கு நியாயமான மற்றும் சுதந்திரமான பொருளாதாரம் தேவையை அவை வலியுறுத்தின. இது இலங்கையின் பாரம்பரிய விழுமியங்களை அச்சுறுத்தும் கவலைகளுக்குப் பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்டது.

இவை இலங்கையின் பொருளாதாரத்தை உலகளாவிய வர்த்தகத்திற்குத் திறந்துவிடவும், முதலீட்டைத் தூண்டவும், தனியார் நிறுவனங்களை அரச கட்டுப்பாட்டில் உள்ளவற்றுடன் போட்டியிட அனுமதிக்கவும் மற்றும் சுதந்திர சந்தைகளுடன் அதிகாரத்துவ விநியோக வழிமுறைகளை மாற்றவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தாராளவாதச் சீர்திருத்தங்கள் மற்றும் தாராளமயமாக்கப்பட்ட கடன் ஆகியவை பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க போதுமானதாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. சந்தையைத் திறப்பதன் மூலமும் சந்தைக்குத் தேவையான உட்கட்டமைப்பு, சட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

அரசாங்கத்தின் பொதுத்துறை இலக்குகள் வெற்றியடைந்தன. வீடுகள், அரசாங்கக் கட்டிடங்கள், அணைகள், மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் நீர்ப்பாசனப் பணிகளை நிர்மாணித்தல் போன்றவை அரச செலவில் சாத்தியமாகின. ஆனால், பொருளாதாரத்தில் உள்நாட்டு தொழில்முனைவோர் மற்றும் வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்பு எதிர்பார்க்கப்பட்டவை இருக்கவில்லை.

1978, 1979 மற்றும் 1980களில் பொருளாதார ஏற்றத்தைக் கட்டவிழ்த்து விடுவதில் வெற்றி பெற்றன. எவ்வாறாயினும், 1981 முடிவடையும் போது, பொருளாதாரக் குறி காட்டிகள் குறைவான நம்பிக்கைக்குரியவையாக இருந்தன. உயரும் அரசாங்கக் கடன்கள், உயர் பணவீக்கம், மோசமான வர்த்தகப் பற்றாக்குறைகள் மற்றும் தேக்கமடைந்த பொருளாதார செயல்திறன் ஆகியவற்றின் கலவையானது சாதாரண இலங்கையர்களைப் பாதிக்கத் தொடங்கியது. பிரபலமான சமூகநலத் திட்டங்களில் வெட்டுக்கள் தவிர்க்க முடியாததாக ஆக்கியது. பாதகமான சமூகத் தாக்கங்கள் மற்றும் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே விரிவடையும் இடைவெளி ஆகியவை வளர்ச்சிக்கான அவசரத்தில் எவ்வித கவனத்தையும் பெறவில்லை.

திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட 1978இல், இலங்கையின் உண்மையான மொத்த தேசிய உற்பத்தி வியக்கத்தக்க வகையில் 25 வீதத்தால் வளர்ச்சியடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வோர் பொருட்கள் இப்போது பரவலாகக் கிடைக்கின்றன. ஆனால், அவை பலரின் இயலுமைக்கு அப்பாற்பட்டவை.

திறந்த பொருளாதார சீர்திருத்தங்கள் அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புகளை பலவீனப்படுத்தி, ஏழைகளை அதிக ஆபத்தில் ஆழ்த்தியது.

1978 க்குப் பிறகு, இந்த வளர்ச்சியின் பெரும்பகுதி பணவீக்கத்தால் தூண்டப்பட்டது. விலைகள் 1978இல் 9 சதவீதமும், 1980இல் 20 சதவீதமும், 1982இல் 38 சதவீதமும் அதிகரித்தது. பணவீக்கத்திற்கு ஏற்ப, வருடாந்திர வளர்ச்சியானது 1979 மற்றும் 1981க்கு இடையே சராசரியாக 5 சதவீதமாக இருந்தது, ஆனால், 1982இல் 16 சதவீத சரிவு முந்தைய பலன்களை முற்றாக அழித்துவிட்டது.

பொருளாதாரம் வளர்ச்சியடைந்ததால், மக்கள் செறிவான விவசாயப் பகுதிகளிலிருந்து கொழும்புக்கு இடம்பெயர்வதும், புதிதாகத் திறக்கப்பட்ட மகாவலி நிலங்களுக்கு இடம்பெயர்வதும் ஒரு கவர்ச்சிகரமான விருப்பமாக மாறியது. புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலோர் சிங்களவர்கள். அவர்களும் புதிதாகக் கல்வியறிவு பெற்ற இளைஞர்களும், குறைந்த பொருளாதார வாய்ப்புகளால் விரக்தியடைந்தவர்களும் தங்கள் அவல நிலைக்கு அரசியல்வாதிகளையும் தமிழர்களையும் குறை கூறினர்.

1980இன் இறுதியில், இலங்கையர்களின் வாங்கும் திறன் 1977 நிலைமைகளோடு ஒப்பிடும் போது 15 சதவிகிதம் குறைந்துவிட்டது.

மோசமான வர்த்தக விதிமுறைகள் மற்றும் ஊதிப்பெருப்பிக்கப்பட்ட அரசாங்க வரவு செலவுத் திட்டங்களால் பொருளாதாரத்தில் ஒரு தீய சுழற்சி உருவானது. அரசியல் ஆதரவைத் தக்கவைக்க வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு அவசியமானது.

எனவே, அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, பிற சலுகைகள் என அரசியல் ஆதரவைத் தக்கவைக்க ஜே.ஆர் பொருளாதாரத்தைக் காவு வாங்கினார். ஆவர் 1982இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

இவ்வாறு அரசியல் ஆதரவைத் தக்க வைக்க அரசாங்கம் கடன் வாங்க வேண்டியிருந்தது. ஏனெனில், கடன் வாங்குவதன் மூலம் மட்டுமே அரசாங்கம் தனக்கு நிதியளிக்க முடியும். கடன் வாங்குவது பணவீக்கத்தைத் தூண்டியது.

இது அதிக ஊதியத்திலிருந்த உண்மையான நன்மைகளை விரைவில் அழித்துவிட்டது. பணவீக்கத்தால் ஊதிய உயர்வுகள் நகர்ப்புறங்களில் உள்ள நடுத்தர வர்க்க அரசு ஊழியர்களுக்குப் பலனளிக்கவில்லை. அவர்கள் திறந்த பொருளாதார சகாப்தத்தில் தமது பொருளாதார மட்டத்திலிருந்து கீழிறங்குவதை அனுபவித்தனர்.

தோட்டத் துறைக்கு வெளியே நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், குடும்பத் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் சிறு நில உரிமையாளர்கள், சுயதொழில் செய்பவர்கள், மீன்பிடி அல்லது கால்நடை வளர்ப்பில் வாழ்வாதாரம் கொண்டவர்கள், சிறு குடிசைத் தொழில் தொழிலாளர்கள் மற்றும் சாதாரண தொழிலாளர்கள் ஆகியோர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வகுப்பினராயினர்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பலர் கிராமப்புறங்களில் வாழ்ந்தனர், ஆனால், அவர்களில் அதிக நடமாடும், குறிப்பாக இளைஞர்கள், நகர்ப்புற மையங்களுக்குச் சமீபத்தில் குடியேறியவர்கள்.

கொழும்பிலும் மற்ற நகரங்களிலும், தங்களைச் சுற்றி புதிதாகக் காட்சிப்படுத்தப்பட்ட கவர்ச்சியான ஆடம்பரப் பொருட்களை உறுப்பினர்களால் வாங்க முடியாத விரக்தியடைந்த உழைக்கும் வர்க்கத்தின் பிரிவினராக அவர்கள் பெருக்கினர்.

இவை எதையும் திறந்த பொருளாதாரக் கொள்கையால் சரி செய்ய இயலவில்லை. அரசாங்கம் மிகப்பெரிய நெருக்கடியில் தள்ளாடியது. இதிலிருந்து தன்னைத் தற்காக்கவும் பிரச்சினைகளைத் திசைதிருப்பவும் இனவாதத்தைக் கையிலெடுத்தது.

# 2024 Microsoft Sri Lanka Imagine Cup வெற்றியாளர்கள்



Microsoft ஸ்ரீலங்காவினால் AL ஐ பயன்படுத்தி மாணவர்களுக்கு புத்தாக்கமான தீர்வுகளை வடிவமைப்பதற்கு வலுவூட்டும் பிராந்திய Imagine Cup போட்டி 2023 டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றிருந்ததுடன், அவற்றில் HearMe, DevRelax அணிகள் மற்றும் Autumn அணி ஆகியன Microsoft Sri Lanka Imagine Cup இன் பிராந்தியமட்ட வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து Imagine Cup Global அரையிறுதிப் போட்டியில் பங்கேற்பதற்காக HearMe மற்றும் DevRelax ஆகியன தெரிவு செய்யப்பட்டிருந்தன.

global அரையிறுதிப் போட்டியில் பங்கேற்பதற்காக முன்னேற்றம் கண்டுள்ள 19 அணிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு அணிகளாகவும் அமைந்துள்ளமையால், இலங்கையைப் பொறுத்தமட்டில் இது மைல்கல் சாதனையாக அமைந்துள்ளது.

மூன்று பிராந்திய வெற்றியாளர்களுக்கும் Microsoft இலங்கை அலுவலகத்துக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், இதர அணியினருடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களின் புத்தாக்கங்களையும் பார்வையிட்டிருந்தனர்.

மேலும், தமது புத்தாக்கமான தீர்வுகளைப் பற்றி, Microsoft இந்தியா மற்றும் தெற்காசிய பிராந்திய தலைவர் புனீத் சந்தோக் மற்றும் Microsoft இலங்கை மற்றும் மாலைத்தீவுகள் முகாமையாளர் ஹர்ஷ ரன்தெனி ஆகியோருக்கும் விளக்கமளித்திருந்தனர்.

இந்த மாணவர்களின் திறமைகளை கண்டு இரு தலைவர்களும் திருப்தியை வெளியிட்டிருந்ததுடன், அவர்களின் தீர்வுகளை மேம்படுத்தி செம்மைப்படுத்திக் கொள்வதற்கான மேலதிக ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

uearMe மற்றும் அணிகளில் s DevRelax of Information Technology (SLIIT) இன் மாணவர்கள் அடங்கியிருந்தனர். இதில் uearMe அணியைச் சேர்ந்தவர்கள் செவிப்புலன் குறைபாடுடைய சிறுவர்கள் மத்தியில் சொற்திறன் மற்றும் மொழித்திறன்களை துரிதப்படுத்த புத்தாக்கமான வகையில் வடிவமைக்கப்பட்டிருந்த பயிலல் சாதனத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

அணியினர் தமது தயாரிப்பு தொடர்பில் குறிப்பிடுகையில், "எமது தயாரிப்பை வெளிப்படுத்துவதற்கு கிடைத்த வாய்ப்பு தொடர்பில் நாம் பெருமளவு மகிழ்ச்சி கொள்வதுடன், செவிப்புலன் குறைப்பாட்டுடன் வாழும் சிறுவர்கள் மத்தியில் நேர்த்தியான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இதனை வடிவமைத்துள்ளோம். அவர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப நாம் எதிர்பார்ப்பதுடன், மொழியைப் பயிலும் அவர்களின் கல்விப் பயணத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தத் தீர்வை நாம் வடிவமைத்துள்ளோம்" என்றார்.

DevRelax அணியினால் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட desktop அப்ளிகேஷன் தயாரிக்கப்பட்டிருந்தது. தொழிற்துறையின் பிரத்தியேகமான கேள்விகளுக்கான அழுத்தத்தை குறைக்கும் பரிபூரண தீர்வை வழங்கும் வகையில் இது அமைந்துள்ளது. இந்தத் திட்டம் தொடர்பில் அந்த அணியினர் குறிப்பிடுகையில், "தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த நபர்களின் நலன் என்பது அழுத்தங்கள் நிறைந்ததாகவும், சவால்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

உணர்வுகள் மற்றும் அழுத்தங்களை நிர்வகிக்கும் வகையில் தொழில்நுட்பசார் தீர்வை நாம் வடிவமைத்துள்ளோம். எமது புத்தாக்கத்தை பயன்படுத்தி, ஆரம்ப நிலை நிறுவனமொன்றை நிறுவ எதிர்பார்ப்பதுடன், அதனூடாக இலங்கையில் வளர்ந்து வரும் இந்தத் துறைக்கு ஆதரவளிக்க எதிர்பார்க்கின்றோம்" என்றனர்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (KDU) Autumn அணியினால், பெற்றோருக்கு தமது பிள்ளைகளில் ஒட்டிசம் தொடர்பில் இனங்காண்பதற்கு பெற்றோருக்கு உதவும் வகையிலான தீர்வை வடிவமைத்துள்ளது.

"எமது தீர்வுடன்,பெற்றோருக்கு தமது பிள்ளைகளில் ஒட்டிசத்தை ஆரம்ப கட்டத்தில் இனங்காண்பதற்கான ஆதரவு வழங்கப்படுவதுடன், தொடர்பாடல் செயற்பாடுகளினூடாக பிரத்தியேகமான ஆதரவை வழங்குவதுடன், அதனூடாக தொடர்பாடல் மற்றும் உணர்வுபூர்வமான ஒழுங்குபடுத்தல்களை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும்" என்றனர்.

# கொமர்ஷல் வங்கிக்கு புதிய தவிசாளரும் பிரதி தவிசாளரும் நியமனம்



கொமர்ஷல் வங்கியின் புதிய தவிசாளராக உயர்தர சர்வதேச முதலீட்டு வங்கியாளர் சர்ஹான் முஹ்ஸீன் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு நிதிச் சேவைகள் தொழில்சார் நிபுணரான ராஜா சேனநாயக்க பிரதித் தவிசாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனங்கள் திங்கட்கிழமை (22) முதல் அமுலுக்கு வந்துள்ளன.

வங்கியின் பிரதி தவிசாளராக இருந்த முஹ்ஸீன், தவிசாளராக பதவி வகித்த பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன ஓய்வு பெற்றதை அடுத்து அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

முஹ்ஸீன் பதவி உயர்வு பெற்றதை அடுத்து இதுவரை நிறைவேற்று அதிகாரமில்லாத பணிப்பாளராக இருந்த ராஜா சேனநாயக்க அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட முதலீட்டு வங்கியாளரான சர்ஹான் முஹ்ஸீன் வர்த்தக ரீதியான ஒன்றிணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல் ஆகிய பிரிவுகளிலும், கூட்டாண்மை நிதி மற்றும் மூலதன சந்தையிலும் விரிவான அனுபவம் கொண்டவர். ஆசியப் பிராந்தியம் முழுவதும் பல நிதி நிறுவனங்களில் அவற்றின் மூலோபாய கூட்டாண்மை நிகழ்ச்சி நிரல் மற்றும் திட்டமிடல்களை வகுப்பதில், பணிப்பாளர் சபைகளுடனும், சிரேஷ்ட தலைமைத்துவங்களுடனும் உயர் நிலைப் பதவிகளில் இணைந்து பணியாற்றி உள்ளார்.

இதற்கு முன் அவர் பெஸ்ட் இன் கிளாஸ் குளோபல் முதலீட்டு வங்கியிலும், கிரடிட் சுயிஸ், பேங்க் ஒப் அமெரிக்கா மெரில் லின்ச் அன்ட் ஜேபி மோர்கன் நிறுவனங்களிலும் பிராந்திய ரீதியான தலைமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். டீலொயிட்டின் இணை பணிப்பாளராகவும் அவர் பதவி வகித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் முதுமாணி பட்டத்தை பெற்றுள்ள சர்ஹான் முஹ்ஸீன் வர்த்தக நிர்வாக கலைமாணி கௌரவ பட்டத்தை வெஸ்ட்டர்ன் மிச்சிகன் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். நியுயோர்க்கில் ஜேபி மோர்கனில் கூட்டாண்மை நிதி பயிற்சி நெறியையும் அவர் பூர்த்தி செய்துள்ளார். சிங்கப்பூர் முகாமைத்துவ பல்கலைக் கழகத்தில் சபைகளுக்கான தலைமைத்துவ பயிற்சியையும் நிறைவு செய்துள்ளார்.

செப்டெம்பர் 2020 முதல் கொமர்ஷல் வங்கியின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக கடமையாற்றிய ராஜா சேனநாயக்க இலங்கை ஊயு நிறுவனத்தின் முழு நேர உறுப்பினராவார்.

கல்வித்தகமைக்குப் பிந்திய 39 வருட அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பி.கொம் விஷேட பட்டத்தைப் பெற்றுள்ள அவர், அதே பல்கலைக்கழகத்தின் PIM பிரிவில் வர்த்தக முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

யூரோமணியில் வங்கியியல் மற்றும் நிதி பயிற்சியையும் அவர் பெற்றுள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பொது முகாமைத்துவ பயிற்சியையும் அவர் பூர்த்தி செய்துள்ளார்.

"ஏர்னஸ்ட் அன்ட் யங்" நிறுவனத்தில் தனது ஆய்வுகளை நிறைவு செய்த சேனநாயக்க பட்டயக் கணக்காளராக பதவி நிலை பெற்று சிங்கர் (சிலோன்) நிறுவனத்தில் 1991இல் நிதி கணக்காளராக இணைந்தார்.

பிறகு 1994இல் நிதித்துறை சிரேஷ்ட முகாமையாளராக கொமர்ஷல் வங்கியில் இணைந்தார். 2004 ஜனவரியில் அவர் (நிதி மற்றும் திட்டமிடல்) பிரதி பொது முகாமையாளராகப் பதவியேற்றார்.

2007 பெப்ரவரி வரை அவர் இந்தப் பதவியை வகித்தார். 2007 மார்ச்சில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் அதன் பிரதம நிதி அதிகாரியாக இணைந்து கொண்டார்.

கொமர்ஷல் வங்கிக்கு முழு அளவில் சொந்தமான கிளை நிறுவனமான வரையறுக்கப்பட்ட CBC நிதி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் அவர் பணியாற்றுகின்றார்.

# மனமெனும் ஊழி



சொற்களற்ற
நிசப்தத்திலிருந்து
அடர்ந்து
பெருகுகிறது
பறவைகளற்ற
வானம் ...

தனிமை
தவளையெனவாகி
வானுக்கும்
பூமிக்குமென
குதித்து மீள்கிறது ...

'மீதேன்' நதிகள்
பெருக்கெடுக்கும்
அறுவடைக்கு பின்னான
வயல் நிலங்கள்
என்றைக்கும் என் நதிமூலம் ...

சாம்பல் அள்ளி
பூசிக்கொள் என் இறைவா ...

மனமெனும்
மாய நதியில்
ஒருக்களித்து கிடக்கும்
ஓரலை உன் நுதல் கண் ...


பொசுங்குதலுக்கான
கணமொன்றில்
காற்றென விலகுவாய் ...

குளிர்தலுக்கான
தினமொன்றில் மீண்டும்
தீவளர்ப்பாய் ...

ருத்ரா ...
தேவா ...

அத்தனைக்கும்
பிரிய முற்றுள்ள
உன் அக்கினி குஞ்சை
எந்தபொந்தில்
பதுக்கிகொள்வாய் ...

-லலித்தா-



# நம்பேன்



இன்னும் நான்
எத்தனைநாள்
இவ்வுலகில் வாழ்வேன்
இதன் பின்பு நான்
மாள்ந்தால்
எங்கேதான் போவேன்
வரும்போது நிரந்தரமே
வாழ்வென்று வந்தேன்
வந்த பின்பே வந் தவழி
போவதைநான்
கண்டேன்...

எனக்கென்றுஎடு
த்ததெல்லாம்
எனக்கில்லைஎன்றால்
எதற்காக எடுத்துள்ளேன்
எடுத்துக்கொண்டும்
உள்ளேன்
விளக்கமொன்றும்
தெரியாமல்
வீட்டுக்கெ
ன்றுஉழைத்து
வீடுபேறுஅடையாமல்
வீணனாகச் செல்வேன்...

இறைவனிடம்
சென்றாலும்
நான் இருகரம் கூப்பி
இன்னும் தா என்றே
தான்
எப்போதும் கேட்பேன்
வறியவர்கள்
இருந்தாலும்
கோயில்
வாசல்முன்னால்
வழிமாறிப் போய்நான்
வெளியேறிச் செல்வேன்.

பொதுநலம் என்று
சொன்னால்
எனக்குப் பிடிக்கவே
பிடிக்கா
போட்டியோடு
வாழ்தலே
மிகவும் பிடிப்பாய்
இருக்கும்
பிள்ளைகளும்
மனைவியும்
பெருஞ்செல்வ
மாயிருந்தால்
நான் பிறந்ததற்கு
அர்த்தம்
அதுவென்றே
இருந்தேன்...

எனது வயதை
ஒத்தவர்கள்
இறப்பதனைப்
பார்த்தேன்
இரவுபகலாய் இப்போது
எந்நாளும் நோவேன்
உறவுமுறை
என்பதெல்லாம்
உண்மையி
ல்லைஎன்பேன்
உயிர்பிரிந்தால்
எனக்கென்று
ஒன்றையும் நான்
நம்பேன்...

- நீலையூர் சுதா -

# கொட்டுமுரசே



காட்டுக்குள்
இருந்தபோது
உன்னை
காத்தவளை - நீ
நாட்டுக்குள் வந்தபோது
தூற்றலாமா?
உன் கனவுக்கெல்லாம்
உயிர்
கொடுப்பவளை - நீ
ஒருநாள் மட்டும்
நினைத்து
வாழ்த்தலாமா?
பொதுச் சபையில்
வந்துநின்றுமட்டும்
விளக்குஏத்தலாமா?
ஆனந்த தாண்டவத்தில்
வந்த
கவி மெட்டுமுரசே..!
ஆணுக்கு பெண்
நிகரென்று
கொட்டுமுரசே..!

கற்பெனும் சிறைக்குள்
பெண்ணை வைத்து
கோயில் கட்டினோம்...
கணிகை என்றவள்
காதலை
தட்டினோம்...
வேண்டும் என்றவள்
மூக்கை
மூர்க்கமாக
வெட்டினோம்...
வேண்டாம் என்றவளை
மூட்டை
கட்டினோம்...
இலக்கியத்திலும்
இனியிது
வேண்டாம்
என்றுபாட்டு
கட்டுமுரசே..!
அனிச்சையாக ஆணுக்கு
பெண்
நிகரென்றுகொட்டு
முரசே..!

மண்ணில்
மாக்கோலமிட்ட
மங்கையின் கைகள்...
விண்ணையும் தாண்டி
இயங்கவில்லையா..?
திண்ணைசாணமிட்ட
நங்கையின் கைகள்...
வில்லேந்திபாணம்
தொடுக்கவில்லையா..?
ஈழத்திலும் அவள் கொடி
பறக்கவில்லையா..?
உரிமைக்காக அவள்
துடிக்கவில்லையா..?
அன்னமிட்ட
அன்னையின் கைகள்
சாதனைப் பக்கத்தில் தன்
பெயர்
பொறிக்கவில்லையா..?
பெண் அன்புக்குதாழ்
என்று
ஓங்கிதட்டுமுரசே..!


எதிலும்
ஆணுக்குபெண்
நிரென்று
கொட்டுமுரசே..!

தோற்ற பொலிவில்தான்
தோற்றாள் - அவள்
ஊற்றின் உயிரினில்
காற்றாள்...
மாற்றம் வருமென்று
பார்த்தாள் - உன்
மதிமயங்கும் நிலைவர
சுடர் ஏற்றாள்...
அந்திசாய்கையிலும்
வரும் மலர்
மொட்டுமுரசே..!
ஆணுக்கு பெண்
நிகரென்று
கொட்டுமுரசே..!

காக்கை குருவியை
பாடுவோம்
அதன் கர்ம வினைகளை
தேடுவோம்...
சேர்க்கை நிலையிலே
நின்று வாழுவோம்
ஓர் சைகை மொழியிலே
நாம் இங்கு மீழுவோம்
ஆனந்த தாண்டவத்தில்
வரும்
கவி மெட்டுமுரசே..! - நீ
ஆணுக்கு பெண்
நிகரென்று
கொட்டுமுரசே..!

பெருங் காட்டினில்
உலவிடும்
மகத்துவம்..! - அங்கே
நம் கண்ணுக்கு
தெரிகின்றது
பெரும் சமத்துவம்..! -
அதை
கண்டுணர்ந்து
பெண்ணை
மதிப்போம்..! - அவள்
உண்டியில் தவமிருந்தே
நாம் உதிப்போம்..!
தேவதைகையில்
இருக்கிறது
இருதட்டுமுரசே..! -
அதில்
ஆணுக்கு பெண்
நிகரென்று
கொட்டுமுரசே..!

-இரவிகாந்தன்-
திருகோணமலை



# விதிமீறல்

கருநாகக் காபெட் சாலை
குருதித்தாகமெடுக்கும் எமனாய்
நீண்டு,வளைந்து,உயர்ந்து,தாழ்ந்து
என்னமாய் படுத்துக் கிடக்கிறது...

காற்றைக் கிழித்து முதுகில் பறக்கும்
ஊர்திக்காரர்களுக்கு
மரணத்தின் அவசரம்.
மொபைல் செருகிப் பேசி
பாடலில் லயிக்கும் பயணம்...
முச்சந்திகளில் முட்டிக் கொண்டிருக்கும்
ஓட்டுநர்களின் வீரத்தைகணத்தில்
வீசி எறிகிறது வீதியும் விதி மீறலும்

உறவிழந்தகுடும்பங்களின்
பட்டியல் முற்றுப்பெறா
சாலையாய் நீண்டுகிடக்க

எண்ணிலடங்கா ஊர்திகளோ
ராட்சதக் கழுகுகளாய்
பறக்குது என் குட்டித்
தீவில்...

- பாலையுற்று -
அஷ்ரபா நூர்தீன்





இந்தியா

# குண்டு துளைக்காத பாதுகாப்பு கவசம்

இந்தியாவின் மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மிக இலகுவான குண்டுத் துளைக்காத பாதுகாப்பு கவசத்தை உருவாக்கியுள்ளது.

இந்த ஜாக்கெட் 6 குண்டுகள் வரை தடுக்கக் கூடியது. '7.62- 64 ஆர்.ஏ.பி.ஐ' குண்டுகளைக் கூட இந்த ஜாக்கெட் தடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய பாதுகாப்பு அமைச்சகம் கூறுகையில், "இந்தகுண்டு துளைக்காத ஜாக்கெட் சண்டிகரில் உள்ள அணு ஆயுதஆராய்ச்சி பரிசோதனை முனையத்தில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. இந்த ஜாக்கெட் புதிய வடிவமைப்பு அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது" என்று தெரிவித்துள்ளது.



கான்பூரில் உள்ள பாதுகாப்புத் துறையின் ஆராய்ச்சி அமைப்பு இந்த ஜாக்கெட்டை உருவாக்கியுள்ளது. எடை குறைந்த மிக இலகுவான குண்டுத் துளைக்காத ஜாக்கெட்டை வெற்றிகரமாக உருவாக்கியதற்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை செயலாளர் பாராட்டு தெரிவித்துள்ளார்.


இந்தியா பாதுகாப்புத் துறையில் சுயசார்பை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது. இராணுவ தளவாடங்களை உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது. மேலும், இராணுவக் கட்டமைப்பை நவீனப்படுத்தியும் வருகிறது. அதன் நீட்சியாகவே தற்போதுமிக இலகுவான குண்டு துளைக்காத ஜாக்கெட் உருவாக்கப்பட்டிருக்கிறது.

திருப்பதி

# பக்தர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

ஆந்திர பிரதேசத்தில் 105 முதல் 107 டிகிரி வரை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் மக்கள் வீட்டிலிருந்து வெளியே வர அச்சப்படுகின்றனர்.

திருப்பதியில் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கடும் வெயில் காரணமாக அவதி அடைந்து வருகின்றனர். வெயில் காரணமாக வெளியூர் பக்தர்கள் வருகை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இதற்கமைய, தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து காணப்படுகிறது. ரூ.300 டிக்கெட் மற்றும் இலவச தரிசனத்திற்கு வந்த பக்தர்கள் நேரடியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், திருப்பதியில் ரூ.2.66 கோடி உண்டியல் காணிக்கை வசூலாகியிருப்பதாக தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏதென்ஸ்

# செவ்வாய் கிரகமான ஏதென்ஸ்

ஐரோப்பா கண்டத்தின் முக்கிய நாடுகளில் ஒன்றானது கிரீஸ் தலைநகரம் ஏதென்ஸ். பல்வேறு சிறப்புகளுக்கு பெயர்போனதாக விளங்கி வரும் ஏதென்ஸ் நகரம் உலகின் மிகவும் தொன்மையான நகரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் மையப்புள்ளியாக ஏதென்ஸ் விளங்குகிறது. நவீன ஒலிம்பிக் போட்டிகளின் தாயகமாக விளங்கும் இந்த நாட்டில் பல்வேறு சிறப்புவாய்ந்த நினைவு சின்னங்களும், புராதன கட்டிடங்களும் உள்ளன. பண்டைய காலம் முதலே வெளிநாட்டினரும் சுற்றுலா பயணிகளும் விரும்பி செல்லும் நகரமாக ஏதென்ஸ் விளங்குகிறது.

இந்தநிலையில், ஏதென்ஸ் நகரம் திடீரென ஆரஞ்சு நிறமாக காட்சியளித்தது.
இதனால் சுற்றுலாப் பிரயாணிகள் உள்ளூர்வாசிகளும் அதிர்ச்சியடைந்துள்ளனர். டூர்கோவூனியா மலை, புனித குன்றுகளை கொண்ட அக்ரோபோலிஸ் ஆகியவையும் செவ்வாய் கிரகத்தை பிரதிபலிப்பதுபோல காட்சியளித்தன. ஏதென்ஸ் நகரின் இந்த மாற்றத்துக்கு அமெரிக்க



விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா விளக்கம் கொடுத்துள்ளது. அதாவது, வட ஆபிரிக்காவில் இருந்து கிரீஸ், சிப்ரஸ், மாசிடோனியோ உள்ளிட்ட நாடுகளுக்கு இந்தகாலத்தில் மேக கூட்டங்கள் நகருவது வாடிக்கைதான். இந்தநிலையில் அசாதாரணமாக இந்த மேக கூட்டத்துடன் சாகாரா பாலைவனத்தின் மண்துகள்கள் கலந்ததால் கிரீசை ஆரஞ்சு நிற போர்வை போர்த்தியதுபோல புழுதி புயல் தாக்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ்

# வறட்சியால் 6 பேர் பலி

தென்கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸில் கடந்த 3 மாதங்களாக கடும் வறட்சி நிலவி வருகிறது.

இந்நிலையில், இந்த மாதம் ஆரம்பத்தில் இருந்தே பிலிப்பைன்ஸில் கடும் வெப்பம் நிலவிவருவதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக மத்திய பிலிப்பைன்ஸ், சோசிச்கசர்கென் மாகாணம் ஆகிய பகுதிகளில் 110 டிகிரி வரை வெப்பம் பதிவாகியது. இதனால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டு ஒன்லைனில் வகுப்புகள் நடத்தப்படுவதாக அங்குள்ள தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.



இந்நிலையில் வெப்ப தாக்கம் காரணமாக பிலிப்பைன்ஸில் இந்தாண்டு இதுவரை 6 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தென் ஆபிரிக்கா

# மரண விளிம்புக்கு சென்ற மக்கள்

தென் ஆப்பிரிக்காவில் விமானம் புறப்படும் போது அதன் சக்கரம் தனியாக கழன்று விழுந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, விமானி பத்திரமாக விமானத்தை தரையிறக்கியுள்ளார்.

ஃப்ளை சஃபார் எனும் விமான நிறுவனத்திற்கு சொந்தமான போயிங் 737 விமானம், ஜோகன்னஸ்பர்க்கின் ஓர் டாம்போ விமான நிலையத்திலிருந்து, 1,300 கி.மீ தொலைவில் உள்ள தென் ஆப்பிரிக்காவின் தலைநகரான கேப் டவுன் விமான நிலையத்திற்கு புறப்பட தயாரானது.

வழக்கமான எல்லா சோதனைகளும் முடிந்த பின்னர் விமானம் ஓடுதளத்திலிருந்து மேலெழும்பி வானத்தில் பறந்தது. அப்போது எதிர்பாராத விதமாக விமானத்தின் சக்கரம் ஒன்று கழன்று விழுந்தது.

விமான நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி விமானத்தின் சக்கரம் கழன்று விழுந்ததை விமானியிடம் கூறியுள்ளனர். இதனையடுத்து விமானம் உடனடியாக தரையிறங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விமானத்தை தவிர, ஜோகன்னஸ்பர்க்கில் வேறு எந்த விமானமும் தரையிறங்க கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே மற்ற விமானங்கள் அருகில் இருக்கும் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டன.

# ஐ.பி.எல்: குஜராத்தை வென்ற டெல்லி



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற குஜராத் டைட்டான்ஸ் உடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத்தின் அணித்தலைவர் ஷுப்மன் கில், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி, சந்தீப் வரியரிடம் ஜேக் பிறேஸர்-மக்குர்க், பிறித்திவி ஷோ, ஷே ஹோப்பை பறிகொடுத்தது. எனினும் அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் றிஷப் பண்டின் ஆட்டமிழக்காத 88 (43), அக்ஸர் பட்டேலின் 66 (43) மற்றும் ட்ரிஸ்டான் ஸ்டப்ஸின் ஆட்டமிழக்காத 26 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 225 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குஜராத், கில்லை ஆரம்பத்திலேயே அன்றிச் நொர்கியாவிடம் இழந்தது. பின்னர் ரித்திமான் சஹாவும், வொரியருக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய சாய் சுதர்ஷன் மூலம் வேகமாக ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், சஹா 39 (25) ஓட்டங்களுடன் குல்தீப் யாதவ்விடம் விழுந்ததோடு, அடுத்து வந்த அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் உடனடியாக அக்ஸர் பட்டேலிடம் வீழ்ந்தார். குறிப்பிட்ட இடைவெளிகளில், 65 (39) ஓட்டங்களைப் பெற்ற சுதர்ஷன், ஷாருக் கான் ஆகியோர் ஷோவுக்குப் பதிலாக மாற்றுவீரராகக் களமிறங்கிய ரசிக் சலாமிடம் வீழ்ந்ததோடு, ராகுல் டெவாட்டியா குல்தீப்பிடம் வீழ்ந்தார்.

இதையடுத்து, அதிரடியாக 55 (23) ஓட்டங்களை டேவிட் மில்லர் பெற்றபோதும் அவர் முகேஷ் குமாரிடம் வீழ்ந்தார். இறுதி ஓவர்களில் 13 (06) ஓட்டங்களைப் பெற்ற கிஷோர் சலாமிடம் வீழ்ந்ததோடு, ரஷீட் கான் ஆட்டமிழக்காமல் 21 (11) ஓட்டங்களைப் பெற்ற நிலையில், 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்ற குஜராத் நான்கு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பண்ட் தெரிவானார்.

இந்நிலையில், கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்கிறது.

பொக்ஸ் ஹில் தேசிய சம்பியனான

# கமால்தீன் ஹம்தானை வாழ்த்திய அலி சப்ரி ரஹீம்

■ எம்.யூ.எம்.சனூன்



பொக்ஸ் ஹில் சுப்பர் குறொஸின் 125சிசி மோட்டார் சைக்கிளோட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற புத்தளம் கொத்தாந்தீவைச் சேர்ந்த கமால்தீன் ஹம்தானை நேரில் பாராட்டும் முகமாக அவரது இல்லத்துகு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேரில் சென்று தனது வாழ்த்துகளை செய்வாய்க்கிழமை (23) தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்திலிருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களை பாராட்டும் நிகழ்வு கூடிய விரைவில் புத்தளத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகளை அலி சப்ரி ரஹீம் இதன்போது குறிப்பிட்டார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# எவெர்ற்றனிடம் தோற்ற லிவர்பூல்


இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் தோற்றது.

எவெர்ற்றன் சார்பாக ஜராட் பிராத்வைட், டொமினிக் கல்வேர்ட்-லூயின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 77 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 74 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூலும், 73 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 66 புள்ளிகளுடன் அஸ்டன் வில்லா நான்காமிடத்திலுமுள்ளது.



# பார்சிலோனாவிலேயே தொடரும் ஸ்கெவி?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முகாமையாளரான ஸ்கெவி பெர்ணாண்டஸ், பார்சிலோனாவுடனான தனது ஒப்பந்தம் அடுத்தாண்டு 2025ஆம் ஆண்டு வரையில் இருக்கின்ற நிலையில் தனது பதவியில் அவர் தொடர்வாரெனக் கூறப்படுகிறது.

பார்சிலோனா தொடர் தோல்விகளைச் சந்தித்த நிலையில் நடப்புப் பருவகாலத்துடன் முகாமையாளர் பதவியிலிருந்து விலகுவதாக இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் ஸ்கெவி அறிவித்திருந்தார்.

இந்நிலையில் ஸ்கெவியை நேற்று முன்தினம் பார்சிலோனாவின் தலைவர் ஜோன் லப்போர்ட்டா சந்தித்தமையைத் தொடர்ந்தே ஸ்கெவி தனது ஒப்பந்தம் முடியும் வரை தொடர்வாரெனக் கூறப்படுகிறது. லமினே போன்ற இளம்வீரர்களை வளர்த்தமையே ஸ்கெவியை பார்சிலோனா நிர்வாகம் தொடர விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 26 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.